**சுருக்கம்**

மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு வார்டு குழுக்கள் அமைத்தல் –ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.144** **நாள்: 19.9.2011.**

**படிக்கப்பட்டன:**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 43631/ 2010/ எம்.3, நாள் 13.9.2011.
2. மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித எண். 43631/ 2010/ எம்.3, நாள் 13.9.2011.

----

**ஆணை:**

நகராட்சி நிர்வாக ஆணையர், முதலாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு 100 வார்டுகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும், 100 வார்டுகளுக்கு 4 வார்டு குழுக்கள் அமைக்க மதுரை மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களின் கருத்துக்கள் கோரப்பட்டதாகவும், மதுரை மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் 17 உள்ளாட்சிகளில், ஆனையூர், திருப்பரங்குன்றம் ஆகிய 2 நகராட்சிகள், ஹார்விபட்டி, திருநகர், விளாங்குடி ஆகிய 3 பேரூராட்சிகள், உத்தங்குடி, கண்ணனேந்தல், நாகனாகுளம், சின்ன அனுப்பானடி, ஐரவாதநல்லூர் ஆகிய 5 ஊராட்சிகள், மேற்படி மண்டல எல்லை (வார்டு குழுக்கள்) வரையறையை ஏற்றுக்கொண்டுள்ளதாக மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**2.** மேலும், மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் தனது அறிக்கையில், அவனியாபுரம் நகராட்சி மன்றம் தமது தீர்மானத்தில், அவனியாபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் (ஐந்து புதிய வார்டுகள் 59, 60, 61, 62 மற்றும் 94) ஒரே மண்டலத்தில் இணைக்க வலியுறுத்தி தீர்மானித்துள்ளதாகவும், எனினும், மேற்படி நகராட்சியின் புதிய வார்டு எண்.94–ன் எல்லை திருப்பரங்குன்றம் பகுதியை ஒட்டி அமைவதால், அந்த ஒரு வார்டு மட்டும் மண்டலம் எண்.4–ல் இணைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி தீர்மானத்தை நிராகரிக்கலாமென குறிப்பிட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**3.** மேலும், மேலமடை, வண்டியூர், சிந்தாமணி ஆகிய கிராம ஊராட்சிகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் (12.09.2011) எவ்வித கருத்துக்களும் தெரிவிக்காததால், மேற்படி மன்றங்கள் தெரிவிக்க வேண்டிய கருத்துக்கள் ஏதும் இல்லை என முடிவு செய்யலாம் என சிறப்புப்பணி அலுவலர் தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார். திருப்பாலை கிராம ஊராட்சி மன்றம், அவ்வூராட்சியை மதுரை மாநகராட்சியின் இரண்டு வார்டுகளாக பிரிக்க

வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், புதுக்குளம் பிட் II, தியாகராசர் காலனி ஆகிய ஊராட்சி மன்றங்கள், தொடர்ந்து ஊராட்சிகளாகவே இருக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், இப்பொருள்கள் குறித்து ஏற்கனவே அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இக்கோரிக்கைகளை நிராகரிக்கலாம் என மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**4.** இதனடிப்படையில், மதுரை மாநகராட்சிக்கு 4 வார்டு குழுக்களை அமைத்து 1971–ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–A ன்படி அரசாணை வெளியிடுமாறு மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாகவும், சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் மீது உரிய ஆணை பிறப்பிக்க பரிந்துரைப்பதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**5.** அரசு, மதுரை மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீதான நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை கவனமாகப் பரிசீலித்து, அவற்றை ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில், இவ்வாணையின் பின்னிணைப்பில் கண்டுள்ளவாறு, மதுரை மாநகராட்சியின் வார்டு குழுக்களை அமைத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6.** இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கை (Appended Notification) 19.9.2011–ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**7.** மேற்படி ஆணைகளின் அடிப்படையிலான உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை மாநகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச.கருத்தையா பாண்டியன்**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்:**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79. (இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கையை *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடவும், அதன் 50 நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம்.
ஆணையர், மதுரை மாநகராட்சி.
**நகல்:**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2/அ.ந.2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

**APPENDIX.**

**NOTIFICATION.**

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) and in supersession of the Municipal Administration and Water Supply Department Notification No. II(2)/MW/2096(I-2)/96, published at page 2 of Part II–Section 2 of the Tamil Nadu Government Gazette Extra-ordinary, dated the 15th October 1996, the Governor of Tamil Nadu hereby constitutes four wards committees for the Corporation of Madurai and each of the said wards committee specified in column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof :-

**THE TABLE.**

| **Serial Number (1)** | **Wards Committee (2)** | **Ward Numbers Comprising the Wards Committee (3)** |
|---|---|---|
| (1) | Wards Committee – I | 1 to 23 |
| (2) | Wards Committee – II | 24 to 49 |
| (3) | Wards Committee – III | 50 to 74 |
| (4) | Wards Committee- IV | 75 to 100 |

**S.KARUTHIAH PANDIAN**
**SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

**Section Officer.**